(முற்பகல் 10-40)

(5) கவன ஈர்ப்புகள்

(அ) எண்ணூர் ஸ்டீல் எண்டர் பிரைசஸ் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''2—3—1984 அன்று எண்ணூரில் இரும்பு உருக்கும் தொழிற்சாலையில் உலைவெடித்து, அதனால் பல தொழிலாளர்கள் காயமுற்றது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

2—3—1984 அன்று காலை 7.15 மணி அளவில் எண்ணூர் ஸ்டீல் எண்டர்பிரைசஸ் என்ற தொழிற்சாலையில் இந்த விபத்து நடந்தது. இந்த தொழிற்சாலையில் பழைய இரும்புகளை '' ஆர்க் பர்னஸ் '' என்ற மின்சார உலையில் போட்டு 1,400 சென்டி கிரேடு வெப்பத்தில் உருக்கப்பட்டு, அந்த உருகிய உலோக திரவம் மோல்டில் போடப்பட்டு ' பில்லட்ஸ் ' ஆக மாற்றப்படுகிறது. இந்த பில்லட்ஸ் என்ற இரும்பு உருக்கு ஆலையில் உருட்டுக் கம்பிகளாகவும், பட்டைக் கம்பிகளாகவும் தயாரிக்கப் பயன்படுகிறது.

2—3—1984 அன்று இந்த அதிக வெப்பமுள்ள உருகிய திரவம் உலையில் இருந்து ' லேடில் ' என்று சொல்லப்படும் உலோகப் பாத்திரத்தில் மாற்றப்பட்டது. இந்த உலோகப் பாத்திரம் 12' × 12' × 10' என்ற அளவுள்ள ஒரு பக்கத்தில் அமைக்கப்பட்ட குழியில் கிரேன் மூலம் தொங்க விடப்பட்டு இருந்தது. அப்படி அந்த உருகிய திரவத்தை மாற்றும்போது, அதிக அளவு திரவம் தரையில் கொட்டப்பட்டுவிட்டது. அதிக வெப்பத்தி

1934 மார்ச் 21] [திரு. எஸ். இராகவானந்தம்]

னால் இந்த உருகிய திரவம் தரையில் இருந்து அதிக சக்தியுடன் பீரிட்டுக் கிளம்பி கூரையைத் (Asb stos Sheet) தாக்கி இருக்கிறது. இப்படித் தாக்கியதினால் கூரைத் தகடுகள் சிதறி கீழே விழுந்துவிட்டன. கிரேன் அறையில் இருந்து தொழிலாளி பயந்து எதுவும் செய்ய முடியாமல் அப்படியே அமர்ந்துவிட்டார். தன்னுடைய சாட்சியத்தில் இந்தத் தொழிலாளி பெரிய தீயை யும், புகையையும் கண்டதாகத் தெரிவித்துள்ளார்.

கூரைத் தகடுகள் சிதறி விழுந்ததினால், 17 தொழிலாளர்கள் காயமுற்றனர். இந்த ஆலை அமைந்திருக்கும் பணிமனையின் அளவு 150'×55'. கூரையின் உயரம் 62'. காயமுற்ற 17 தொழிலாளர்கள் ஸ்டேன்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டு, அவர்களில் 16 தொழிலாளர்கள் உடனே கவனிக்கப்பட்டு வீடு சென்றுவிட்டனர். ஒரு தொழிலாளி மட்டும் தீவிர சிகிச்சை யில் இருந்தார். அவரும் தற்பொழுது வீடு சென்றுவிட்டார்.

இந்த உருகிய உலோக திரவம் எந்தத் தொழிலாளியின் மீதும் படவில்லை. உயரே இருக்கும் கிரேன் அறையில் இருந்த தொழிலாளிக்கும் எந்தவிதமான காயமும் இல்லை. இந்த விபத்தின் காரணம் இன்னும் ஆராயப்பட்டு வருகிறது. எனி னும் தொழிற்சாலை ஆய்வாளரின் பூர்வாங்க விசாரணையில் இந்த கிரேன் இயக்கும் தொழிலாளி தவறுதலாக கிரேன் கட்டுப்பாடு சுவிட்சுக்களை பயத்தினால் இயக்கியதைத் தொடர்ந்து லேடில் என்ற உலோகப் பாத்திரம் கவிழ்ந்து அதிக திரவம் தரையில் கொட்டியிருக்கலாம் என்று ஊகிக்கலாம். கொட்டிய தளத்தில் ஈரப்பதம் இருந்ததினால் உருகிய உலோகம் வெடித்துச் சிதறி யிருக்கிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து குறிப்பிட்ட விபத்து குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பது புலனாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக் கிற அறிக்கையைப் பார்த்தால், இந்த ஆலையிலே நிர்வாகம் கடைபிடிக்க வேண்டிய சேப்டி மெஷர்ஸை கடைபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட வேண்டும். ஆனால், அந்த சேப்டி மெஷர்ஸ் அவர்களால் எடுக்கப்பட்டனவா என்ற நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அது மட்டுமல்ல, சமீபகாலத்தில் தொழிற்சாலைகளில் அதிக மான் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு சில நாட்களுக்கு முன்னால், இங்கே நெய்வேலியிலே ஏற்பட்ட விபத்தைப் பற்றி கூறப்பட்டது. ஆகவே, பேக்டரி இன்ஸ்பெக்டர் முன்கூட்டி, இது சம்பந்தமாக என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவற்றை எடுத்து, சேப்டி மெஷர்ஸ் இம்ப்ளிமென்ட் பண்ணுவதில் ஒரு சில தயக்கங்களோ, அல்லது டிலேயோ அல்லது ஓமிஷன்ஸ் ஏற்படுவதாகச் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இப் படிப்பட்ட சேப்டி மெஷர்ஸ் இம்ப்ளிமென்ட் செய்யாத பாக்டரி இன்ஸ்பெக்டர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையான நட வடிக்கைகள் எடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புதிதாக, (Chief Inspector of Factories Health and Safety) என்றே ஒரு பதவியை உருவாக்கி, அவர் இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறார். இந்த விபத்தைப் பொறுத்தவரையில், தொழிற்சாலை ஆய்வாளர் பூர்வாங்க விசாரணை நடத்தியுள்ளார் உடனடியாக. இந்த விபத்தின் காரணம் இன்னும் ஆராயப்பட்டு வருகிறது. அது ஆராயப்பட்டு முழு அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும்.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த கைத்தறித் துணிகளுக்குப் பணம் கொடுக்காமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, ப. வெங்கட்டசுப்பிர மணியம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர் மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் ரூ. 70 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாலும், கொள்முதல் செய்த துணிகளுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பணம் கொடுக்காத காரணத்தாலும் நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த '' அவ சரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.